*1*

# தேவனுடைய நாளுக்கான அவருடைய மனிதர்

## [1 இராஜாக்கள் 19:14-21; 2 இராஜாக்கள் 2:1-18]

*எலியாவின் ஊழியம் சிறப்பானதாயிருந்தது. அவருடைய முயற்சியின் விளைவாக, வட இராஜ்யத்தில் பாகாலியம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆகாபின் குமாரனாகிய யோராம் ஆட்சிக்கு வந்த போது, "தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான்" (2 இராஜாக்கள் 3:2ஆ). இருப்பினும், யோசபேல் உயிரோடிருக்கும் வரையிலும், பாகால் வழிபாடு தொடர்ந்து கொண்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 16:31; 2 இராஜாக்கள் 10:18-28). யெரொபெயாம் திரும்ப அறிமுகப்படுத்தின விக்கிரக வழிபாடு உட்பட, மற்ற தீமைகள் தொடர்ந்துகொண்டுதானிருந்தன (2 இராஜாக்கள் 3:3). இந்த நாட்கள் இன்னும் கலக்கம் நிறைந்த நாட்களாகவே இருந்தன. தேவனுக்கு இஸ்ரவேலில் இன்னும் அவருடைய மனிதர் தேவைப்பட்டார்.*

*எலிசா அந்த நாளுக்கான தேவனுடைய மனிதராய் இருந்தார். எலியாவை போன்று இவர் நன்கு அறியப்பட்டவரல்ல. இருப்பினும் அவர் ஒரு ஆச்சரியமான மனிதராயிருந்தார். 2 இராஜாக்கள் புத்தகத்தை வாசியுங்கள்; எலிசாதான் இப்புத்தகத்தின் கதாநாயகன். இராஜாக்களின் வாழ்க்கையைக் குறித்தல்ல, இவருடைய வாழ்க்கையே பிரதானமாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

*எலிசாவின் ஊழியத்தில் நிகழ்ந்த ஏறக்குறைய இருபது நிகழ்வுகள் வேதாகமத்தில் பதியப்பட்டுள்ளன. அவருடைய வாழ்வு பற்றிய நம்முடைய பாடம், அவர் தீர்க்கதரிசியாய் அழைக்கப்பட்டதிலிருந்து துவங்குகிறது.*

### தேவன் தெரிந்து கொண்ட மனிதர்
### *(1 இராஜாக்கள் 19:14-21)*

**புகார்களும் - பதில்களும்**

*எலிசாவைப்பற்றி முதன் முறை 1 இராஜாக்கள் 19 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சோர்ந்துபோன எலியா ஓரேப் மலை குகையொன்றில் அடைபட்டு கிடக்கிறார். அவர் பாகாலின் தீர்க்கதரிசிகளை கர்மேல் மலையில் தோற்கடித்தார், ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தில் அவர் மாற்றத்தை காணவில்லை. அவர் நான்கு புகார்களை தேவனிடத்தில் வைத்தார்:*

> *சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய*

*தீர்க்கதரிசிகளை பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் (வசனம் 14).*

யெகோவா எலியாவின் புகார்களுக்கு ஒவ்வொன்றாக பதில் அளித்தார். முதலாவது, "இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்" என்று தீர்க்கதரிசி கூறினார். தேவன் அவரிடம் "ஆசகேலைச் சீரியாவின் மேல் ராஜாவாக அபிசேஷகம்பண்ணு என்றார்" (வசனம் 15). சீரியாவின் மேல் ராஜாவாக ஆசகேல் இஸ்ரவேல் தேசத்தை தண்டிப்பார்.

எலியாவின் இரண்டாவது புகார், கர்த்தருடைய பலிபீடங்கள் இடித்து தள்ளப்பட்டு விட்டன என்பதாயிருந்தது. ஆகாபும் யேசபேலும்தான் இந்த தெய்வ நிந்தனையான செயலை தூண்டிவிட்டவர்களாயிருந்தனர். இதற்கு பதிலுரைப்பாக, கர்த்தர் யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணு என்றார் (வசனம் 16அ). யெகூ ஆகாபின் அரசாட்சியை அழித்து, பாகால் வணக்கத்தை ஒழித்துப்போடுவான்.

மூன்றாவதாக, "இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள் என்றார்" (வசனம் 14ஈ). இதற்கு பதிலுரைப்பாக, கர்த்தர், "இதைப் பற்றி கவலைப்படாதே, வேறு ஒருவரை நான் பணி அமர்த்துவேன்" என்றார். அவர் எலியாவைப்பார்த்து "ஆபேல்மெ - கொலா ஊரானான சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை உன் ஸ்தானத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு" என்றார் (வசனம் 16ஆ).

எலியாவுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவுகள் அவனுக்கான ஊழிய கட்டளைகளாயிருந்ததுபோல, எலிசாவுக்கான பணிபொறுப்புகளாயும் இருந்தன. இது தொடர்பாக சில கருத்துக்கள் சொல்வது அவசியமாயிருக்கிறது. துவக்கமாக, "அபிஷேகம்பண்ணுதல்" என்ற வார்த்தை உருவகநடையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமான அபிஷேகம் பண்ணும் விதம் ஒருவருடைய தலையின்மேல் ஒலிவ எண்ணெயை ஊற்றுவதாக இருந்தது; நமக்கு தெரிந்தவரை யேகூவின் தலையின்மேல் எண்ணை ஊற்றப்பட்டது, அது எலியாவினால் செய்யப்படவில்லை (2 இராஜாக்கள் 9:1-6). "அபிஷேகம் பண்ணுதல் என்பதின் அடிப்படை பொருள் ... தேவனுடைய பணிக்காக *பிரித்துவைப்பது* என்பதை நினைவில் வையுங்கள்."[1]

மேலும், எலியா தேவனுடைய பணிக்கென பிரித்துவைத்து ஏற்படுத்தின மூவரில் எலிசா ஒருவராக இருந்தார். மற்ற இருவர் - ஆசகேல் மற்றும் யெகூ - இவர்கள் எலிசாவினாலும் அவருடைய மாணவர் ஒருவராலும் பணிநியமனம் செய்யப்பட்டனர் (காண்க 2 இராஜாக்கள் 8:7-15; 9:1-10). கீழ்வரும் வரைபடம் தொடர் நிகழ்ச்சியை விவரிக்கும்:

எலியா → எலிசா (1 இராஜாக்கள் 19:19-21)
↓
எலிசா → ஆசகேல் (2 இராஜாக்கள் 8:7-15)
↓
மாணவர் → யெகூ (2 இராஜாக்கள் 9:1-10)

*தேவனுடைய கண்ணோட்டத்தில், எலியா இதை எல்லாம் செய்தார். எலியாவின் வேலைக்காரன் (எலிசா) ஆசகேலை பணியமர்த்தின போது, அது எலியா அவனை பணியமர்த்தினதாகவே இருந்தது. அதேபோல், எலிசாவின் வேலைக்காரர் யெகூவை அவருடைய கட்டளைப்படி பணியமர்த்தின போது, அது எலிசா தாமே செய்ததாயிருந்தது. மறுபடியுமாக, செயல் முறையில் எலியா எலிசாவின் மூலம் செயலாற்றினார்.*

*ஓரேப் மலையில் தேவன் எலியாவுக்கு செய்த பதிலுரைப்புக்குத் திரும்புவோம்: "சம்பவிப்பதாவது, ஆசகேலின் பட்டயத்திற்குத் தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான், யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்றுபோடுவான்'' (1 இராஜாக்கள் 19:17). நம்முடைய பாடங்களின் படிப்பினூடே ஆசகேல் மற்றும் யெகூவின் இரத்தம்சிந்தும் நடவடிக்கைகளை நாம் பார்ப்போம். எலிசாவின் ஊழியம் அடிப்படையில் ஆவிக்குரியதாக இருக்கும்போது, அவர்களுடைய வேலை சரீரம் சார்ந்தாக இருக்கும். "அநீதியானவர்களை'' "மரணத்திற்கு உட்படுத்துவதற்கு'' எலிசா பயன்படுத்தும் பிரதான "ஆயுதம்,'' "தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுதலாயிருக்கும்'' (எபேசியர் 6:17; காண்க எபிரேயர் 4:12). அந்த வசனம் கீழ்ப்படியாதோருக் கெதிரான நியாயத்தீர்ப்பை அறிவிக்கும்.*

*எலியா நான்காவது புகாரை கூறினார்: தான் மாத்திரம் மீந்திருப்பதாக கூறினார். "பாகாலுக்கு முடங்காதிருக்கிற'' ... "7,000 பேர் இஸ்ரவேலில் இன்னும் மீந்திருக்கிறார்கள்'' என்பதை தேவன் உறுதிசெய்தார் (1 இராஜாக்கள் 19:18). கர்த்தருடைய வார்த்தைகள் எலியாவை பெலப்படுத்தின. "அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய், ...'' என்று வசனம் 19 கூறுகிறது. மீண்டுமாக, அவர் இஸ்ரவேலில் தேவனுடைய மனுஷரானார்!*

### சவால்கள் - மற்றும் மறுமொழிகள்

*எலியா தேவனுடைய கடைசிகட்டளைக்கு முதலில் கீழ்ப்படிந்தார் (வசனம் 16ஆ). வளமான யோர்தான் பள்ளத்தாக்கின் வடமுனையிலுள்ள ஆபேல்மெகோலேக் பட்டணத்தை அடைகிற வரை சுமார் 150 மைல்கள் வடக்கு நோக்கி பயணித்தார் (இப்புத்தகத்தில் உள்ள வரைபடத்தை காணவும்). "சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை கண்டுபிடிக்கிறவரை அந்த பகுதியை தேடினார்'' (வசனம் 19ஆ). நாம் எலிசாவின் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றி சிறிதளவே அறிகிறோம். பாகாலுக்கு முடங்காதிருந்த "7,000'' பேரில் இவரது குடும்பமும் ஒன்றாக இருந்தது. அவனுடைய பெற்றோர் அவனுக்கு "எலிசா'' என பெயரிட்டனர், அதன் பொருள் "என் தேவன் இரட்சிப்பானவர்'' அல்லது "என் தேவன் இரட்சிக்கிறார்'' என்பதாகும்.[2]*

*எலியா முதன்முறை எலிசாவை கண்டபோது, அவர் ஏர் உழுதுகொண்டிருந்தார் (வசனம் 19இ). மூன்றரை ஆண்டு வரட்சி இப்போது தான் முடிவுக்கு வந்தது. (1 இராஜாக்கள் 17:1; 18:1, 2, 41-45; காண்க யாக்கோபு 5:17, 18), ஆகவே மூன்றாண்டுகளில் இது அவர்களுடைய முதல் விளைச்சலாக இருக்கும்! எலிசாவுக்கு முன்பாக, "பன்னிரண்டு ஏர்கள் இருந்தன, அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான்'' (வசனம் 19ஈ). வாக்கிய அமைப்புப்படிபார்த்தால், எலிசா மற்ற பதினொரு ஏர் ஓட்டிகளையும் ஏதோ ஒரு வகையில் வழிநடத்திக் கொண்டிருந்தார் என தெரிகிறது எலிசாவின்*

குடும்பத்திற்கு பன்னிரண்டு ஏர் மாடுகள் சொந்தமாக இருந்திருக்குமானால் - அவர்களுக்கு வேலைக்காரரும் இருந்தார்கள் - அப்படியானால் அவர்கள் செல்வ செளிப்பான ஒரு குடும்பமாக இருந்தார்கள்.

நடைபெறும் "நேர்காணல்" வழக்கத்துக்கு மாறானது. எலியா எலிசாவை பார்த்து எதுவும் சொல்லவில்லை. அவன் இருந்த இடத்திற்கு அவர் சென்று, "அவன் மேல் தன் சால்வையை போட்டான்" (வசனம் 19உ). எலியாவின் சால்வையானது ஆட்டுத் தோல், ஆட்டு ரோமம் மற்றும் பிற கடினமான பொருள்களால் உருவான எளிய மேல் ஆடையாயிருந்தது. செப்துவஜிந்த்தின் (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு) 2 இராஜாக்கள் 2:8ல் "சால்வை" என்பதற்கு பதிலாக "ஆட்டுத்தோல்" என்றுள்ளது. மோசே கோலை பயன்படுத்தினது போல, எலியா சால்வையை பயன்படுத்தினார். எலியாவின் சால்வையானது "பணிஅடையாள வில்லை"யாகவும் மற்றும் அற்புதங்களை செய்வதற்கான கருவியாகவும் மாறியிருந்தது.

அந்த காட்சியை கற்பனை செய்து பாருங்கள்: ஒரு நாள் எலிசா ஏர் உழுதுகொண்டிருக்கையில், எங்கிருந்தோ கரடுமுரடான தோற்றமுடைய ஒரு முதியவர் தோன்றுகிறார். அந்த மனிதர் அவனை பார்த்து, இரவில் போர்வையாக பயன்படுத்தியதால் கிழிந்துபோன, உடல் வியர்வையினாலும் பிரயாண புழுதி யினாலும் நனைந்துபோன, கரடு முரடான சால்வையை தனது தோள்களில் இருந்து எடுத்து, ஒரு வார்த்தையும் சொல்லாமல், அந்த சால்வையை எலிசாவின் தோள்களின் மேல் போட்டார்.

இந்த விநோதமான செயலுக்கு நான் எப்படி பதிலுரைத்திருப்பேன் என்பது எனக்கு தெரியாது. ஆனால் ஏதோ ஒரு வகையில் எலியாவின் செயலின் முக்கியத்துவத்தை எலிசா புரிந்து கொண்டார். ஒருவேளை தேவன் அவனுக்கு தெய்வீகமான புரிந்துகொள்ளுதலை கொடுத்திருக்கலாம். சாத்தியமான வகையில், எலிசா எலியாவைப் பற்றியும் அவருடைய புகழ்மிக்க சால்வையைப் பற்றியும் அறிந்திருந்த நிலையில், இந்த செயலின் அர்த்தம் என்ன என்பதை அறிந்திருந்தார். நடைமுறையில் முதிய தீர்க்கதரிசி சொன்னது, "நீ என்னை பின்பற்றி வா, இப்போது நீ என் சால்வையின் கீழ் இருப்பதுபோல, நான் உன்னை பராமரிப்பேன். எனது பணியிடத்தை நிரப்பும்படி உனக்கு நான் பயிற்சி கொடுப்பேன் என்பதாக இருந்தது."

எலியா எலிசாவின் மேல் தன் சால்வையை போட்ட பிறகு, அவர் சாலை வழியே நடந்து சென்றார். எலிசா உடனே பதிற்செய்தார். தேசத்தை அழித்துக் கொண்டிருந்த ஆவிக்குரிய புற்றுநோய் பற்றி அவர் உள்ளம் வருந்திக் கொண்டிருந்திருக்கும். "அப்பொழுது அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி, நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப் பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான்" (வசனம் 20அ). வேறு வார்த்தையில் சொல்வதென்றால், "நான் போக ஆயத்தமாயிருக்கிறேன். எனது பெற்றோரிடம் பிரியாவிடை சொல்லிவர எனக்கு ஒரு நிமிடம் கொடுங்கள்."

இந்த வேண்டுகோளுக்காக எலிசா குறைகூறப்பட்டார். அவர், "கலப்பையின் மேல் தன் கையை வைத்து" பிறகு "பின்னிட்டுப் பார்க்கிற" ஒரு சீஷனுக்கு ஒப்பிடப்பட்டார் (காண்க லூக்கா 9:61, 62). 1 இராஜாக்கள் 19ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் எலிசாவுக்கும் லூக்கா 9ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும்

*சீஷராக விரும்புகிறவர்களுக்குமான வித்தியாசம் அவர்கள் இருதயங்களின் ஈடுபாட்டைபொறுத்தது. லூக்கா 9:57-62 இல் குறிப்பிடப்படுகிறவர்கள் சாக்குபோக்கு சொன்னார்கள். ஆனால், எலிசா சாக்குபோக்கு எதுவும் சொல்லவில்லை. தேவனுடைய ஊழியத்தில் எலியாவை பின்பற்றுவதற்கு தன் வாழ்வை அற்பணிக்க அவர் ஆயத்தமாயிருந்தார்.*

*அதற்கு அவன்; "போய் திரும்பி வா, நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்" என்றான் (1 இராஜாக்கள் 19:20ஆ). இந்த வார்த்தைகள் பல விதங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால், எலியா எலிசாவுக்கு தனது பெற்றோர் மற்றும் நண்பர்களிடம் பிரியாவிடை பெற்று விரைவில் திரும்பிவர அனுமதித்தார் என்று தோன்றுகிறது. "நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்?" என்று சொன்ன திலிருந்து, எலியா பின்வரும் கருத்தை உணர்த்தியிருக்கலாம், "நான் உன்னை தீர்க்கதரிசியாக இருக்கும்படி அழைத்துள்ளேன், நீ உன் குடும்பத்தோடுள்ள எல்லா உறவுகளையும் முறித்துக் கொள்ள வேண்டும் என்பது அதின் பொருள் அல்ல, நீ என்ன செய்யப்போகிறாய் என்பதை அவர்களிடம் எடுத்துரைத்த பின்பு; என்னோடு வா."*

> அப்பொழுது அவன் [எலிசா] இவனை [எலியாவை] விட்டுப் [பெற்றோரிடத்திற்குப்] போய், ஓர் ஏர் மாடுகளைப் [அவன் உழவுக்குப் பயன்படுத்தின] பிடித்து அடித்து [பலியிட்டு] ஏரின் மரமுட்டுகளால் [மரநுகமும் கலப்பையும்] அவைகளின் இறைச்சியை [பலியில் பயன்படுத்தாத பகுதி] சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டனர் *(வசனம் 21அ).*

*நான் வாழும் பகுதியில், எலியா "தனக்கு பின்னால் தன் பாலங்களை எரிந்து விட்டான்" என்று சொல்வோம். அவர் இனிமேலும் ஒரு விவசாயியாக இருக்கமாட்டார்; வாழ்க்கையின் அந்த பகுதி முடிந்துவிட்டது. பிரிவு உபச்சார விருந்துக்கு பிறகு, "... அவன் எழுந்து, எலியாவுக்குப் பின் சென்று அவனுக்கு ஊழியஞ் செய்தான்" (வசனம் 21ஆ).*

*எலிசா அடுத்து வந்த 10ஆண்டுகளாக எலியாவோடு பயணித்து, தனக்கு முன்பிருந்த ஊழியத்திற்காக தன்னை ஆயத்தம் செய்தார். 2 இராஜாக்கள் 2ஆம் அதிகாரம் வரை நாம் எலிசாவை குறித்து எதுவும் வாசிப்பதில்லை, ஆனால் கிடைக்கும் சில தகவல்கள் "நான் உம்மை பின் தொடர்வேன்" (வசனம் 20; காண்க 2 இராஜாக்கள் 2:2) என்று தான் சொன்னபடி அவைகளுக்கானவைகளை அவர் செய்து கொண்டிருந்தார் என்று என்னை நம்பும்படி செய்கிறது. நீங்கள் 1 இராஜாக்கள் 20 - 2 இராஜாக்கள் 1 வரையுள்ள பகுதியை வாசிக்கையில் அது எலிசா எலியாவோடு பின்வரும் தத்ரூபமான காட்சிகளில் உடன் இருந்தார் என்பதை படம் பிடித்து காட்டுகிறது:*

- *எலியா நாபோத்தின் திராட்சை தோட்ட விஷயத்தில் ஆகாப் இராஜாவை எதிர்கொண்டது (1 இராஜாக்கள் 21).*
- *அகசியா இராஜாவால் அனுப்பப்பட்ட படையை எலியா எதிர் கொண்டது (2 இராஜாக்கள் 1).*

*எப்படியிருப்பினும், எலிசா எலியாவோடு "உடன் தீர்க்கதரிசியாக" அல்லது*

*"இரண்டாம் நிலை தளபதியாக" செல்லவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். 1 இராஜாக்கள் 19:21ன்படி, எலிசா எலியாவுக்கு "ஊழியம் செய்தான்." எலிசா ஒரு வேலைக்காரனாக உடன் சென்றார். எலியாவுக்கு அவர் என்ன செய்தார்? எலியாவின் தேவைகள் எவைகளாக இருப்பினும் அவைகளையெல்லாம் அவர் சந்தித்தார். 2 இராஜாக்கள் 3:11 இல் எலிசா எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்தவனாக விவரிக்கப்பட்டுள்ளான் - இது ஒரு எளிய பணி.*

*அந்த 10 ஆண்டுகளில், எலிசா நேரடி பணி பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். பின்னர் தீர்க்கதரிசியின் புத்திரர், "எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது" என்று சொன்னார்கள் (2 இராஜாக்கள் 2:15). எப்படியிருப்பினும், எலிசா எலியாவின் சால்வையை பெற்று யோர்தான் நதி தண்ணீரை அடிப்பதற்கு முன்பாகவே அவரது ஆவியைபெற்றவராக இருந்தார். அவர் நீண்ட, குளிர்ந்த இரவுகளை வெளியில் தீர்க்கதரிசிகளோடு செலவிட்டபோதே எலியாவின் ஆவியில் பங்குபெற்றவராக இருந்தார். ஒரு தீர்க்கதரிசியாயிருப்பது எப்படிப்பட்டது என்பதை அவர் எலியாவோடு புளுதி படிந்த வட இராஜ்யத்தின் போராட்டங்களினூடே சென்றபோதே கற்றுக் கொண்டார்.*

## தேவன் அங்கீகரித்த மனிதர்
## *(2 இராஜாக்கள் 2:1-18)*

### *ஒரு முதிய தீர்க்கதரிசி இல்லம் செல்கிறார்*

*இறுதியாக, கர்த்தர் "எலியாவைச் சுழல் காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளும்" வேளை வந்தது (2 இராஜாக்கள் 2:1அ). நியமிக்கப்பட்ட நாளில், எலியா கில்காலிலிருந்து பெத்தேலுக்கும், பெத்தேலிலிருந்து எரிகோவுக்கும் பயணம் செய்தார் (வசனங்கள் 1, 2, 4). இந்த இடங்கள் யூத வரலாற்றில் நினைவுகூரத்தக்கவைகள், ஆனால் தீர்க்கதரிசியானவர் "தன் மலரும் நினைவுகளினூடே செல்லவில்லை." இந்த ஒவ்வொரு பட்டணத்திலும் தீர்க்கதரிசிகளின் பள்ளிகள் இருந்தன (காண்க வசனங்கள் 3, 5; 4:38). எலியா அநேகமாக அந்த மாணவர்களை சந்தித்து நெருக்கடியான நாட்களில் விசுவாசத்தில் நிலைத்திருங்கள் - என்ற இறுதி கட்டளையை கொடுக்க விரும்பியிருக்கலாம்.*

*இந்த பள்ளிகளிலிருந்த மனிதர்கள், "தீர்க்கதரிசிகளின் புத்திரர்" என அழைக்கப்பட்டார்கள் (2:3, 5, 7, 15). "தீர்க்கதரிசிகளின் புத்திரர்" என்பது ஒவ்வொருவரும் தீர்க்கதரிசியாயிருந்த ஒரு தந்தையை உடையவராயிருந்தார் என்று பொருள்படாது. "புத்திரர்" என்பது "இந்த குணாதிசயங்களில் பங்கு பெற்றவராயிருந்தார்" என்று பொருள்படும் எபிரேய வழக்கு சொல்லாகும். இந்த மனிதர் தீர்க்கதரிசி பயிற்சியாளர்களாயிருந்தார்கள். ஆவியினால் ஏவப்படாத பாரம்பரியப்படி, எலியா இந்த பயிற்சி திட்டங்களை துவங்கினார். எலிசா தனது ஊழியகாலமெல்லாம் இந்த பள்ளிகளுடன் நெருங்கிய உறவை பராமரித்து வந்தார்.*

*எலியாவின் இறுதி நாளில், ஒவ்வொரு முறையும் அடுத்த இடத்திற்கு செல்லும் முன்னர், அவர் எலிசாவை பார்த்து, "நீ இங்கே இரு; கர்த்தர் என்னை அந்த இடம் மட்டும் [அந்த இடத்தை குறிப்பிடுவார்] போக அனுப்புகிறார்"*

என்றான் (வசனம் 2; காண்க வசனங்கள் 4, 6). எலியா ஒரு வேளை தனிமையாக இருக்க விரும்பியிருக்கலாம், ஆனால் அவருடைய வார்த்தைகள் ஒரு பரிசோதனைக்காக சொல்லப்பட்டவைகள் போலிருந்தன. (ஒப்பிடுக ரூத் 1:11-13.) எலிசா தனது ஊழிய அர்ப்பணிப்பிலிருந்து விலகுவதற்கான வாய்ப்பை எலியா கொடுத்திருக்கலாம். அவர் ஒரு வேளை இப்படி கூறியிருக்கக் கூடும், "நீ உனது அர்ப்பணிப்பில் உறுதியாயிருக்கிறாயா? அப்படியானால், போராட்டங்கள் உனக்கெதிரே உள்ளன." எலியாவின் நோக்கம் எதுவாக இருப்பினும், எலிசா பின்வாங்க மறுத்துவிட்டார். அவர் ஒவ்வொரு முறையும், "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" என்றான் (2 இராஜாக்கள் 2:2, 4, 6).

இறுதியாக, கர்த்தர் எலியாவை யோர்தான் நதிக்கு அனுப்பினார் (வசனங்கள் 6, 7). தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பது பேர் எலியா மற்றும் எலிசாவை தொலைவிலிருந்து பார்த்தனர் (வசனம் 7). "எலியா தன் சால்வையை எடுத்து முறுக்கித் தண்ணீரை அடித்தான்" (வசனம் 8அ) - மோசே செங்கடலின் மேல் தன் கோலை நீட்டினது போல (யாத்திராகமம் 14:16, 21). உடனே தண்ணீர், "இருபக்கமாகப் பிரிந்தது, அவர்கள் இருவரும் உலர்ந்த தரை வழியாய் அக்கரைக்குப் போனார்கள்" (2 இராஜாக்கள் 2:8ஆ) - யோசுவாவும் அவனுடைய சேனையும் முன்னதாக யோர்தான் நதியை கடந்தது போல இவர்களும் கடந்தனர் (யோசுவா 3:14-17).

அவர்கள் யோர்தானின் கிழக்குப் பகுதியை அடைந்தபிறகு எலியா எலிசாவை நோக்கி, "நான் உன்னைவிட்டு எடுத்துக் கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன கேள்" என்றான் (2 இராஜாக்கள் 2:9அ). எலிசா அநேக காரியங்களை கேட்டிருக்கலாம், ஆனால் அவர், "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்" என்றான் (வசனம் 9ஆ). பின் விளைவுகள் எப்படி இருந்த போதிலும், எலியா தனது தைரியமான விசுவாசத்தின் ஆவியையும், உறுதியான கீழ்ப்படிதலையும், பாரபட்சமற்ற நீதியையும் மற்றும் எல்லாவற்றிக்கும் மேலாக தேவன் மேல் தனக்கிருந்த அசையாத விசுவாசத்தையும் காண்பித்திருந்தார். எலிசா, "உம்மிடத்திலுள்ள அந்த ஆவியை இருமடங்கு எனக்குத் தாரும்" என்று கேட்டான்!

"இருமடங்கு" என்ற வார்த்தை ஓரளவு கடினமாகத் தோன்றுகிறது. எலிசா தன் தலைவரைப் போல இருமடங்கு நல்லவரும் வல்லவருமாயிருக்க வேண்டினார் என்பதற்கான அடையாளம் இல்லை. அநேகமாக அவர், தான் எலியாவின் ஆவிக்குரிய வாரிசாக இருக்கும்படி கோரினார். யூத பிரமாணத்தின் கீழ் மூத்த மகனுடைய சுதந்திரம் "இருமடங்காக" இருந்தது (உபாகமம் 21:17). அந்த மகன் தன் தந்தையின் பெயரை நிலை நாட்டவும் அவர் வேலையைச் செய்யும் பொறுப்பாளியாயிருந்தான்.

அதற்கு எலியா, "அரிதான காரியத்தை கேட்டாய்," என்றான் (2 இராஜாக்கள் 2:10அ). அவர் "*நான்* உனக்குச் செய்யவேண்டியது என்ன, கேள்" என்று கூறியிருந்தார், *தேவனால்* மாத்திரமே கொடுக்கச் சாத்தியமான ஒரு வரத்தை எலிசா கேட்டிருந்தார். இருப்பினும், எலியா நிபந்தனையை நிறைவேற்றினால், அது அவனுக்கு கொடுக்கப்படும். அதற்கு எலியா, "உன்னை விட்டு நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் என்னை நீ கண்டால்

உனக்கு கிடைக்கும்; இல்லாவிட்டால் கிடையாது" என்றான் (வசனம் 10ஆ). தேவன் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, எலிசாவை எலியாவின் பணியிடத்தை நிரப்பும்படி தெரிந்து கொண்டார் (1 இராஜாக்கள் 19:16). இருப்பினும், எலிசா எலியாவை பின்பற்றும் தனது அர்ப்பணிப்பில் உறுதியாயிருந்தால் மட்டுமே அது நிறைவேறும் (வசனங்கள் 20, 21). அவன் அவரோடு இறுதிவரை இருக்கவேண்டியதாயிருந்தது.

எலியாவும் எலிசாவும் யோர்தானிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்தனர். திடீரென, "இதோ, அக்கினி ரதமும் அக்கினி குதிரைகளும் தோன்றின" (2 இராஜாக்கள் 2:11அ). இது பரம சேனையை காட்சிப்படுத்தும் ஒரு முறையாயிருந்தது (காண்க 2 இராஜாக்கள் 6:17; சங்கீதம் 104:4). தூதர்கள் எலியாவை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தனர் (காண்க லூக்கா 16:22)! இரதமும் குதிரைகளும் இருவரையும் பிரித்தது (2 இராஜாக்கள் 2:11ஆ). பலத்த காற்று வீசத் தொடங்கியது, ஆனாலும் புழுதி நிறைந்த சுழல் காற்றினூடே, எலிசாவால் தன் எஜமானை காண முடிந்தது (வசனம் 12அ). அப்பொழுது, "எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (வசனம் 11இ).

எலிசா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே!" என புலம்பினான் (வசனம் 12ஆ). அவனுடைய வார்த்தைகள் தேவனுடைய பரலோகத்தின் சேனையை குறிக்காமல், எலியாவை மட்டும் குறிப்பதாயிருந்தது (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 13:14). எலியா தேவனு டைய ஒற்றை ஆள் இராணுவமாக இருந்தான், "உண்மையான இஸ்ரவேலின் வல்லமையான பாதுகாவலரும் மற்றும் ... அவர்களுடைய பெருமைமிக்க இராணுவ பாதுகாவலை விட அதிக மதிப்புள்ளவனாயிருந்தான்."[3]

எலிசா தன் அங்கியின் மேல் முனையை இரண்டு கைகளாலும் பிடித்து, ஒரு பெரிய துக்கத்தின் அடையாளமாக, இரண்டாக கிழித்தான் (2:12ஈ; காண்க ஆதியாகமம் 37:29; 2 சாமுவேல் 13:19; யோபு 1:20; 2:12). அவன் தன் ஆவிக்குரிய தந்தை தன்னிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதால், ஒரு பிள்ளையைப்போல புலம்பினான். இஸ்ரவேலின் இரதங்களும் மற்றும் குதிரை வீரரும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்று ஒரு தேசபக்தனாகவும் புலம்பினார்.[4]

### ஒரு புதிய தீர்க்கதரிசி பணிக்குச் செல்கிறார்

எலிசா எலியா இருந்த இடத்தை கவனித்து பார்த்தான். தீர்க்கதரிசியின் சால்வை தரையின் மேல் விழுந்து கிடந்தது. எலியாவின் சால்வை நீங்கலாக, அவர் தொடர்பான அனைத்தும் அவரோடு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. எலிசா அந்த சால்வையை எடுத்துக் கொண்டு, யோர்தானை நோக்கி சென்றார் (2 இராஜாக்கள் 2:13). எலியாவின் கடைசி அற்புதம் இவரது முதல் அற்புதமாக இருக்கும்.

எலிசா சேறுநிறைந்த நீரோடையை அடைந்த போது, அவன் சால்வையை முறுக்கி, உரத்த சத்தமாய், "எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லி தண்ணீரை அடித்தான்"[5] (வசனம் 14அ). தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதில் எலியா சந்தேகம் தெரிவிக்கவில்லை. அவன் கேட்டதெல்லாம், "கர்த்தாவே, நீர் இங்கே இருக்கிறீரா? நான் இருமடங்கு பெற்றுக் கொண்டேனா அல்லது இல்லையா? எலியாவுக்கு தண்ணீர் இரண்டாக பிரிந்ததுபோல, இந்த தண்ணீர் எனக்கு பிரியுமா?"

*அது பிரிந்தது! அவன், "தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்" (வசனம் 14ஆ). தேவன் இன்னமும் அங்கு இருந்தார் மற்றும் வல்லமையுடையவராக இருந்தார். அவர் இப்போது எலிசாவில் கிரியை செய்து கொண்டிருந்தார். தேவனுடைய பெரிய போர்வீரரின் மரணம் தேவன் மரித்துவிட்டார் என்று பொருள்படாது, வேலைக்காரன் மரித்துப் போனான், அவ்வளவுதான். சால்வையை எடுத்துக் கொண்டு முன்னேறிச் செல்லும் ஆண்களும் பெண்களும் இருக்கிறவரையில், தேவன் தொடர்ந்து கிரியை செய்வார்!*

*தீர்க்கதரிசியின் புத்திரர் இதை கவனித்துக் கொண்டிருந்தனர் (வசனம் 7). என்ன நடந்தது என்பது அவர்களுக்கு நிச்சயமாக தெரியவில்லை. இருப்பினும், எலியா கிழக்கு நோக்கி செல்லும் போது யோர்தான் இரண்டாக பிரிந்ததையும், இப்போது எலிசா மேற்கு நோக்கி செல்ல யோர்தான் இரண்டாக பிரிந்ததையும் அவர்கள் பார்த்திருந்தார்கள். அவர்கள் ஒரே ஒரு முடிவுக்குதான் வர முடியும்: "எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது" (வசனம் 15அ). எலிசாதான் எலியாவின் பணிவாரிசாக தெய்வீகமாய் நியமிக்கப்பட்டவராக இருந்தார். அவர்கள் அவனுக்கு எதிர்கொண்டு போய் தரைமட்டும் குனிந்து அவனை வணங்கினார்கள் (வசனம் 15ஆ).*

*அவர்கள் எலியாவுக்கு சம்பவித்தது குறித்து இன்னமும் குழப்பத்தி லேயே இருந்தனர். முதியவரான தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆவியினாலே அங்கும் இங்கும் இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவது பற்றி நன்கு அறியப்பட்டிருந்தார் (1 இராஜாக்கள் 18:12; ஒப்பிடுக நடபடிகள் 8:39, 40). அவர்கள் எலிசாவை நோக்கி, "இதோ, உமது அடியாரோடே ஐம்பது பலவான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் போய் உமது எஜமானை தேடும்படி உத்தரவு கொடும்; ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் அவரை எடுத்து, பர்வதங்களில் ஒன்றின் மேலாகிலும், பள்ளத்தாக்குகளில் ஒன்றிலாகிலும் கொண்டுபோய் வைத்திருப்பார்" என்றார்கள் (2 இராஜாக்கள் 2:16அ). எலியாவை தேடுவது ஒரு காலவிரயம் என்பதை எலிசா அறிந்திருந்தார். முதலில், அவர் வேண்டாம் என்று கூறினார் (வசனம் 16ஆ). ஆனால் அவர்கள் இவர் சம்மதிக்கும் மட்டும் வலியுறுத்தி கேட்டுக்கொண்டிருந்தனர் (வசனம் 17அ). "அவர்கள் அவனை சம்மதிக்கப் பண்ணினார்கள்" என்று நாம் கூறலாம்.*

*அவர்கள் மூன்றுநாள் தேடினார்கள் (வசனம் 17ஆ). அவர்கள் எரிகோவுக்கு திரும்பின போது, எலிசா அவர்களை நோக்கி, "போகவேண்டாம் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?" என்றான் (வசனம் 18). அவருடைய கடிந்துகொள்ளுதலில் "நான் சொல்லவில்லையா" என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. அதற்கு மேலாக: "நீங்கள் என்னை உங்கள் தலைவர் என்று ஒப்புக்கொண்டால், நீங்கள் என்னுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள பழகிக்கொள்ளவேண்டும்!" என்றான். எலிசா இப்போது நெருக்கடியான நாட்களில் யெகோவாவின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதியாக இருந்தார்.*

## தேவனுக்கு அவசியமாயிருந்த மனிதர்

### *மேலோட்டமான வித்தியாசங்கள்*

*நமது அடுத்த பாடத்தில், எலிசாவின் ஊழியம் பற்றி படிப்போம்.*

எப்படியிருப்பினும், நான் இந்த பாடத்தை நிறைவு செய்வதற்கு முன்பு, எலிசா மற்றும் அவருக்கு முன் பணியிலிருந்தவரைப் பற்றி, ஒரு ஒப்பீடு செய்ய விரும்புகிறேன். இந்த இரு மனிதரும் தங்கள் ஆளுமையில் வித்தியாசபட்டவர்களாய் இருந்தார்கள் என்பதை கவனிப்பது கடினமானதாயிருக்கும்:

- எலியா பாலைவனக் குழந்தையும், உரோம உடை தரித்தவருமாயிருந்தார். எலிசா நிலத்தை பயிரிடுகிறவனாயும், இயல்பான உடை உடுத்தினவருமாயிருந்தார்.[6]
- எலியா ஒரு துறவி; அவரை கண்டு பிடிப்பது கடினம். எலிசா ஒரு குடும்பபாங்கானவர். தேவைப்படும் நேரத்தில் அவரை கண்டு பிடிப்பதில் மக்களுக்கு சிரமம் இருக்கவில்லை.
- எலியா அமைப்பு சாறா முறையில் (அதாவது, நாளின்/அவரது நாளின் அரசியல் மற்றும் சமூக கட்டுமானங்களுக்கு வெளியே) செயலாற்றினார். எலிசா, "இச்சமூக அமைப்புகளுக்கு" உட்பட்டு செயலாற்றினார்.
- எலியா தேவனுடைய நீதியை பிரதிபலிக்கையில், எலிசா தேவனுடைய இரக்கத்தை பிரதிபலித்தார். எலியா இடி மற்றும் மின்னல் போல் இருந்தார். எலிசா இதமான மழைச்சாரல் போலிருந்தார். எலியா கண்களை இருடாக்கும் வெளிச்சம் போலிருந்தார்; எலிசா உறுதி யான, எரியும் ஜுவாலை போலிருந்தார். எலியா போர்வீரரின் ஒளிரும் பட்டயம் போலிருந்தார்; எலிசா இதமாய் சுகமாக்கும் வைத்தியரின் கத்தி போலிருந்தான்.

இந்த இருவருக்கும் இடையிலிருந்த மாறுபட்ட ஆளுமைத் தன்மைகள், *தேவனால் எல்லா வகை மக்களையும் பயன்படுத்த முடியும்* என்பதை விளக்குகிறது. எலியா அவரது தலைமுறையில் தேவனுக்கு தேவையான வகை மனிதராயிருந்தார். எலிசா அவரது நாளில் தேவனுக்கு தேவையான வகை மனிதராயிருந்தார். நாம் இன்று தேவனுடைய ஊழியர்களை மதிப்பீடு செய்கையில் இதை புரிந்துகொள்ள வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. சிலர் கடந்த காலத்தின் அக்கினிமயமான பிரசங்கியார்களை விரும்புகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கான தேவை இன்னமும் இருக்கிறது. அதே சமயத்தில், தங்கள் "இதமான பதில்களால்" "கோபத்தை மாற்றக்கூடிய" ஊழியர்களும் நமக்கு தேவைப்படுகிறார்கள் (காண்க நீதிமொழிகள் 15:1). இரட்சிப்பதற்கான தேவனுடைய வல்லமை உரக்க பேசப்படும் சத்தத்தில் இல்லை, மாறாக, "ஆரோக்கியமான" (தேவனுடைய வசனத்திற்கு உண்மையாயிருத்தல்) வசனத்தை போதிப்பதில் உள்ளது (தீத்து 2:1, 8; காண்க ரோமர் 1:16).

நாம் தேவனுடைய பணியில் நமது ஆற்றலை மதிப்பீடு செய்கையில் இந்த உண்மையை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. நாம் பிறரைபோல இல்லை என்பதற்காக, நமது பயன்பாட்டுத் தன்மையை குறைத்து மதிப்பிடக் கூடாது. மற்றவர்களுக்கு இருக்கும் தாலந்துகள் மற்றும் ஆளுமைத்தன்மை நமக்கு இல்லாதிருக்கலாம், ஆனால் நமக்கு சொந்தமான பெலன்கள்/சிறப்புகள் நம்மிடம் உள்ளன. கர்த்தருடைய சித்தத்தை செய்கிற *எவரொருவரையும்*, மற்றும் தனது வாழ்வை அவருக்காக அர்ப்பணிக்கிற *எவரொருவரையும்*, அவரால் பயன்படுத்த முடியும் என்பதை உணர்ந்து

கொள்வது முக்கியமானதாயிருக்கிறது.

**அவசியமான ஒற்றுமைகள்**

நாம் எலியா மற்றும் எலிசா ஆகியோருக்கு இடையிலான வேற்றுமைகளை பார்த்தோம். ஆனால் அவைகள் பெரும்பாலும் மேலோட்டமானவைகளாயிருந்தன. கர்த்தருக்காகவும் அவரது வழிகளுக்காகவும் வைராக்கியமாய் அர்ப்பணித்துக் கொள்வது என்று வரும் போது - இருவரும் ஒரே விதமாகவே இருந்தார்கள். அவருடைய நாளில் தேவனுக்கு தேவையாயிருந்த மனிதனாகிய எலிசாவின் குணாதிசயங்களை காண்போம்:

- அவர் தேவனில் ஆழமான விசுவாசம் கொண்டிருந்தார்.
- அவர் தேவ பக்தியுள்ளவராயிருந்தார் (2 இராஜாக்கள் 4:9).
- அவர் தேவனுடைய சித்தம் செய்ய ஆவலாயிருந்தார் (1 இராஜாக்கள் 19:19, 20).
- அவர் கடந்த கால தொடர்புகளை முறித்துக் கொள்ள விருப்பமாயிருந்தார் (1 இராஜாக்கள் 19:21).
- அவர் ஊழியம் செய்ய ஆயத்தமாயிருந்தார் (2 இராஜாக்கள் 3:11).
- அவர் ஊழியத்திற்கு ஆயத்தப்பட பத்து ஆண்டுகள் ஆயினும், அவர் ஊழியத்தை விட்டு விட வில்லை. (சிலர் உடனடி பலன்கள், உடனடி நன்மைகள், உடனடி வெற்றியை விரும்புகிறார்கள்.)
- அவரை தனிமையில் விட்டு விடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் - எலியாவை இறுதி வரை பின்பற்றுவது என்ற தனது ஒப்படைப்பில் - அவர் உண்மையாக இருந்தார் (2 இராஜாக்கள் 2:2, 4, 6, 10-12).
- அவர் தனது பணிப்பொறுப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை அறிந்திருந்தபோதும், அதை ஏற்றுக் கொண்டார். ஒரு விக்கிரக ஆராதனை மலிந்த சமுதாயத்தில் யெகோவாவின் பிரதிநிதியாக இருப்பது என்பது அவரை பிரபலமானவராக மாற்றாது (காண்க 2 இராஜாக்கள் 2:23). இருப்பினும், எலிசா தேவன் தனக்கு முன்வைத்த பணிப் பொருப்பை ஏற்றுக்கொண்டார் (காண்க 1 இராஜாக்கள் 19:16; 2 இராஜாக்கள் 2:9).

மற்ற குணாதிசயங்களையும் நாம் சேர்க்க முடியும். உதாரணமாக, எலிசா மேலானவர் முதல் கீழானவர் வரை எல்லா வகை மக்களிலும் உண்மையான அக்கரையுள்ளவராக இருந்தார். எப்படியிருப்பினும், பட்டியலிடப்பட்ட குணாதிசயங்கள் போதுமானவைகள். *நீங்கள்* முதலில் உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தால், உங்கள் தனித்தன்மை மற்றும் தாலந்துகள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் ... தேவனானவர் உங்களை அவருடைய ஊழியத்தில் பயன்படுத்தமுடியும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறேன்.

## முடிவுரை

“அதை பின்பற்றுவது கடினமான செயல்” என்ற ஒரு பழமொழி உண்டு, இந்த கருத்தானது, மேடையில் ஒரு கலைநிகழ்ச்சி அரங்கேறி, மற்றநிகழ்ச்சி உடனே அறங்கேற்றபட்ட பண்டைய நாட்களில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

ஒருவருடைய நடிப்பு பாராட்டி ஏற்றுக்கொள்ளப்படும் போது, அடுத்து வருபவர் முந்தினவரைப் போல நடிக்க முடியாவிட்டால், பார்வையாளர்கள் கூச்சலிடுவார்கள் என்பதை அறிந்திருப்பார். நன்கு நேசிக்கப்பட்ட ஒரு பிரசங்கியார் ஒரு பிராந்திய சபையிலிருந்து இடம் பெயரும் போது, அடுத்து வரும் பிரசங்கியார், "இதை பின்பற்றுவது கடினமான செயல்" என்பதை விரைவில் கற்றுக்கொள்கிறார்.

எலியாவை பின்பற்றுவது என்பது "ஒரு கடினமான செயல்." அவருடைய ஊழியம் பெரும்பாலும் வியக்கத்தக்க செயல்களை உள்ளடக்கியிருந்தது. அவர் யூத மக்களின் கதாநாயகனாக மாறினார். மேசியா வருவதற்கு முன்னர் அவர் வரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்தனர் (காண்க மத்தேயு 17:10). இவர் மோசே மற்றும் இயேசுவோடு மறுரூபமலையில் நின்றார் (காண்க மத்தேயு 17:3).

"பின்பற்றுவதற்கு கடினமான செயல்" ஒன்று இருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களால் என்ன செய்ய முடியுமோ அதை செய்வீர்கள். தேவன் உங்களுக்கு அருளின தாலந்துகளை பயன்படுத்தி, சிறப்பானதை செய்வீர்கள். இதைத்தான் எலிசா செய்தார். அவர் எலியாவின் ஒரு மங்கலான பிரதியாக இருக்கவில்லை. அவர் தனது தலைவரின் ஒரு நிழலாகவோ அல்லது ஒரு ஒலி பிரதிபலிப்பாகவோ இருக்கவில்லை. அவர் தனக்கென ஒரு பாணியை கொண்டிருந்தார். அவர் அவருடைய நாளில் தேவனுக்கு தேவைப்பட்ட மனிதராயிருந்தார். நெருக்கடியான நாட்களில் தேவனுடைய மனிதராக - அவர் தன்னுடைய பணியை நிறைவேற்றினார். இதற்கு மேலாக தேவன் எவரிடம் எதுவும் கேட்பதில்லை.

## ஆசிரியர்கள் மற்றும் பிரசங்கியார்களுக்கான குறிப்புகள்

நீங்கள் இந்த பிரசங்கத்தை பயன்படுத்தும் போது, ஒருவர் முதலில் தேவனுடைய பிள்ளையாக இல்லாமல், அவர் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றமுடியாது என்பதை வலியுறுத்தி சொல்வீர்கள். விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் எல்லாரும் தேவனுடைய குடும்பத்தில் "பிறக்கும்படி" அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (யோவான் 3:3, 5; நடபடிகள் 2:37, 38; கலாத்தியர் 3:26, 27).

இந்த பாடத்திற்கான பிற சாத்தியமான தலைப்புகள்: "பின்பற்றுவதற்கு ஒரு கடினமான செயல்," "ஒரு மாபெரும் மனிதரின் நிழலில் வாழ்வது," "எலியாவின் கைகளுக்கு தண்ணீர்வார்த்த மனிதன்," "இதைப் போன்ற ஒரு காலத்திற்கு" (காண்க எஸ்தர் 4:14), "ஜனங்களுக்கான ஒரு தீர்க்கதரிசி" மற்றும் "நமது காலத்திற்கான ஒரு தீர்க்கதரிசி."[7] (இந்த பாடத்தின் முடிவுப்பகுதி யில் பட்டியலிடப்பட்டுள்ள) எலிசாவின் பண்புகள் "தேவன் ஏன் எலிசாவை தெரிந்தெடுத்தார்" என்ற பிரசங்கத்திற்கு பயன்படுத்தமுடியும்.

---

குறிப்புகள்

[1]Joseph Hammond, "1 Kings," *The Pulpit Commentary,* vol. 5*, 1 & 2 Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950),

463. [2]*பிற சாத்தியக் கூறுகள் விவாதிக்கப்பட்டுள்ளன, அவை "தேவன் இரட்சிப்பானவர்" அல்லது "தேவன் இரட்சிக்கிறார்" என்பதாகும். எலிசாவை பற்றி நாம் அறிந்திருக்கிற வேறு ஒரு காரியம் எலியாவைப் போல் இவரும் திருமணம் ஆகாதவராக இருந்தார்.* [3]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 196. [4]Henry Blunt, *Lectures on the History of Elisha* (Philadelphia: Herman Hooker, 1839), 31. [5]*எலியாவின் சால்வை குறித்து இங்கு கடைசியாக வாசிக்கிறோம். எலிசா இதை மறுபடியும் எப்போதாவது பயன்படுத்தியிருந்தால், அதற்கான பதிவு இல்லை. அநேகமாக, அது தன் நோக்கத்தை நிறைவேற்றி விட்டது.* [6]*2 இராஜாக்கள் 2:12 இல் இது "துணிகளுக்கான" எபிரேய வார்த்தையால் குறிக்கப்படுகிறது.* [7]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993).